| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **தேனி** | காலம் : | **29/06/2024** | முதல் | **03/07/2024** |
| | அறிக்கை எண் : | **052/ 2024** | வெளியீட்டு நாள் : | | **28/06/2024** | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| **கடந்தவார வானிலை** (23.06.2024 **முதல்** 27.06.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-07-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/06 | 24/06 | 25/06 | 26/06 | 27/06 | **தேதி** | **நாள்-1** 29/06 | **நாள்-2** 30/06 | **நாள்-3** 01/07 | **நாள்-4** 02/07 | **நாள்-5** 03/07 |
| 3.2 | 4.5 | 7.1 | 12.8 | 12.5 | மழை (மி.மீ) | 1 | 1 | 3 | 2 | 2 |
| 39 | 37 | 36 | 37 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 30 | 29 | 29 | 29 | 29 |
| 27 | 27 | 26 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 22 | 21 | 21 | 20 |
| 6 | 6 | 6 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 7 | 7 | 7 |
| 61 | 64 | 67 | 64 | 83 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 60 | 57 | 56 | 55 | 56 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 8 | 19 | 13 | 17 | 11 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 10 | 12 |
| மேற்கு | மேற்கு | வட மேற்கு | மேற்கு | வட மேற்கு | காற்றின் திசை | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** | **மேற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 1, 2 மற்றும் 3 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-30° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 12 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு** (28 ஜூன் - 11 ஜூலை 2024):

### மழைப்பொழிவு :

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

### அதிகபட்ச வெப்பநிலை :

ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 26° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வாழை, மிளகாய், கால்நடை.**

**வாழை:**

வாழை பயிரில் மஞ்சள் இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இதன் அறிகுறியாக, இலையின் இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இடையில் சிறிது நிறமாற்றம் ஏற்படும்.

ஒரு காலகட்டத்தில் இந்த புள்ளிகள் வெளிறிய மஞ்சள் கோடுகள், பழுப்பு நிற கோடுகள் மற்றும் நீள்வட்ட புள்ளிகளாக உருவாகி, இரண்டாம் நிலை நரம்புகளுக்கு இணையாக காணப்படும். இந்நோய் பாதித்த வாழையில் உள்ள இலைகள் கருகி உதிர்ந்து விடும். இந்நோயானது பயிர்களிடையே வேகமாக பரவும் தன்மையுடையது.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் சூடோமோனஸ் புளுரோசன்ஸ், 10 கிராம் பேசிலஸ் சப்டிலஸ், 10 மில்லி பஞ்சகவ்யம், 5 கிராம் நாட்டுசர்க்கரை இவற்றை கலந்து செடிகள் நன்கு நனையுமாறு காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்க வேண்டும்.

**மிளகாய்:**

மிளகாய் பயிரில் பூக்கள், பிஞ்சுகள் உதிர்வதைத் தடுக்கவும், பூக்கள் விடுவதைத் தூண்டவும் நட்ட 60 அல்லது விதைத்த 100வது நாளில் ஒரு முறையம் மேலும் 30 நாட்களுக்குப் பிறகு இரண்டாவது முறையும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி கிராம் என்ற அளவில் வளர்ச்சி ஊக்கி (என்ஏஏ) கலந்து கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.25 மிலி டிரையகான்கைடனால் கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும்.